IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.177/2024

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | PANNEERSELVAM |
| FATHER'S NAME | : | ARUMUGAM |
| VILLAGE | : | LALAPET |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of APRIL 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் மாவட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.12.2023 ம் தேதி காலை 09.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது வசந்தா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.573/2023 சட்டப்பிரிவு 279,337 இதச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையும், புகார் மனுவையும் பெற்று நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சூரி, ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அது முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு கோப்பை தொடர் புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் சிலம்பரசன் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இறந்த நபரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றும், நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய் புகாரை பெற்று பொய்யாக வழக்கு பதிந்தேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சிகளை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.04.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.